# மேல் மாகாண மாகாண சபை - சபைக் கூட்டம்

**2015 யூலை மாதம் 21 ஆந் திகதி மு.ப. 09.30 க்கு**

## நிகழ்ச்சி நிரல்

**I.** **தவிசாளரின் அறிவிப்புக்கள்**

**II.** **அறிக்கைகளையும், ஆவணங்களையும், சமர்ப்பித்தல்**

**III.** **செயற்குழுக்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்**

**IV.** **மனுக்கள்**

**V.** **கேள்விகள்**

**01.** **கௌரவ மஞ்சு சிறீ அரங்கல எதிர்க்கட்சித் தலைவரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் ,ஒழுங்கு ,காணி ,கல்வி, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் ,மனிதவலு அத்துடன் தொழில் வாய்ப்பு ,பொறியியல் சேவை அத்துடன் தகவல் மற்றும் வியாபார அமைச்சரிடம் 2015.07.07 ஆந் திகதி கேட்கப்பட்டகேள்வி :**

**(□/vi (1)15/26)**

அ. மேல் மாகாணத்தின் உள்ளூராட்சித் தாபனங்களுக்கு சென்ற அரசின் பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கை அமைச்சின் மூலம் (கல்வனைஸ்) ஜீ.ஐ. குழாய்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஆ. இதற்கிணங்க ஹோமாகம பிரதேச சபைக்கு எவ்வளவு (கல்வனைஸ்) ஜீ.ஐ. குழாய்கள் வழங்கப்பட்டிருந்தன ? அவை என்ன காரணத்திற்காக ?

இ. தற்போது அந்த (கல்னைஸ்) ஜீ.ஐ. குழாய்கள் பிரதேச சபையிடம் காணப்படுகின்றனவா ?

ஈ. அவை எவ்வளவு எண்ணிக்கை எனக் குறிப்பிட முடியுமா ?

உ. அவை சபையிடம் காணப்படாத விடத்து அதற்குக் காரணம் என்ன ?

**VI.** **வருகை தராமல் இருக்க அங்கீகாரம் பெறும் யோசனை**

**VII.** **அமைச்சுக்களின் அறிவிப்புக்களும்/அமைச்சர்களின் தகவல்களும்**

**VIII.** **தனிப்பட்ட தெளிவுபடுத்தல்கள்**

**IX.** **சபைக் கூட்டம்**

**கௌரவ சபை நடவடிக்கை அமைச்சரினால் சமர்ப்பிக்கப்படுவதற்கு :**

பிரேரணை :

"2015.07.08 ஆந் திகதி நடைபெற்ற சபை நடவடிக்கை செயற்குழுக் கூட்டத்தில் இணக்கத்தை தெரிவித்த படி 2015.08.18 ஆந் திகதி சபைக் கூட்டம் நடைபெறாத தினம் ஒன்றாக கருதி செயற்பட வேண்டும்."

**X.** **சபை நடவடிக்கை**

**கௌரவ சபை நடவடிக்கை அமைச்சரினால் சமர்ப்பிக்கப்படுவதற்கு :**

பிரேரணை :

"இன்றைய தினம் பொது நடவடிக்கை முன்னுரிமை பெற வேண்டும்."

## XI. தனிப்பட்ட உறுப்பினர்களின் நடவடிக்கைகள்

**01. கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ அவர்கள்**

மேல் மாகாணத்தில் இவ்வேளையில் பாடசாலை பிள்ளைகள், பெற்றோர்களிடமிருந்து இடைக்கிடையே நிதி அறவிடப்படுகின்றது, முதலாம் தரம், ஆறாம் தரம், மற்றும் பன்னிரண்டாம் தரங்களுக்காக பிள்ளைகளை ஆட்சேர்க்கும் போதும் அதேபோல், வேறு வகுப்புக்களின் தேவைகளுக்காக பிள்ளைகளிடமிருந்தும் பெற்றோர்களிடமிருந்தும் நிதி சேகரிக்கப்படுவதனால் அவர்கள் மிகவும் கஷ்டத்திற்கு உட்பட்டுள்ளனர் எனவே மேல் மாகாணத்தில் பாடசாலை பிள்ளைகளிடமிருந்தும், பெற்றோர்களிடமிருந்தும் நிதியினைச் சேகரிப்பதை (வசதிக் கட்டணத்தைத் தவிர) நிறுத்த வேண்டும் என இம் மேல் மாகாண மாகாண சபை கருதுகிறது. **(பி/vi (1)14/09)**

**02. கௌரவ லக்ஷ்மன் நிபுணாரச்சி அவர்கள்**

“மேல் மாகாண பாடசாலைகளில் முதலாம் தரத்திற்காக பிள்ளைகளை சேர்க்கும் போது பிள்ளைகளையும் பெற்றோர்களையும் பாதிப்புக்கு உட்படுத்தும் தற்போதைய முறையினைத் திருத்தும் தேவை தோன்றியுள்ளது. அதற்காக பிள்ளைகளை பாடசாலைக்கு ஆட்சேர்க்கும் தினம் தொடக்கம் ஒரு மாதம் நிறைவடைய முன் எல்லா வெற்றிடங்களையும் நிரப்பி நிறைவு செய்வது, பாதுகாப்பு பிரிவுகளில் கடமையாற்றுபவர்களின் பிள்ளைகளின் பெயர்ப் பட்டியலை பிள்ளைகள் ஆட்சேர்க்கப்பட்ட தினத்தில் இருந்து மூன்று வாரங்கள் நிறைவடைய முன் மாகாண சபைக்கு கிடைப்பதற்கு வழி செய்தல், அதிகாரத்தில் உள்ள கட்சி உறுப்பினர்களினால் முன்வைக்கப்படும் பெயர்ப் பட்டியலுக்கு இணங்க பிள்ளைகளை ஆட்சேர்க்கும் முறையை இரத்துச் செய்தல்,

நேர்முகப் பரீட்சையில் கலந்து கொள்ளும் எல்லாப் பிள்ளைகளுக்கும் கிடைக்கப் பெறும் புள்ளிகளுக்கு இணங்க உறுதியான ஆவணம் ஒன்றினை புள்ளிகளின் ஒழுங்கு முறைக்கு இணங்க தயாரிப்பதற்கும், பெற்றுக் கொள்ளப்படும் புள்ளிகளின் ஒழுங்கு முறைக்கு இணங்க பாடசாலைகளுக்கு பிள்ளைகளை சேர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும், எனவும், இதற்கிணங்க மேல் மாகாணத்தின் பாடசாலைகளுக்கு முதலாம் தரத்திற்கு பிள்ளைகளை சேர்த்துக் கொள்ளும் நடவடிக்கையை ஒழுங்கு படுத்தி பாடசாலை ஒன்றுக்கு பிள்ளை ஒருவர் சேர்வதற்கு உள்ள மனித உரிமையை மாகாண மக்களுக்கு உறுதிப்படுத்த வேண்டும். என இம் மேல் மாகாண மாகாண சபை கருதுகிறது.” **(பி/vi (1)14/10)**

## XII. பொது நடவடிக்கை

**01. கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் ,ஒழுங்கு ,காணி ,கல்வி, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் ,மனிதவலு அத்துடன் தொழில் வாய்ப்பு ,பொறியியல் சேவை அத்துடன் தகவல் மற்றும் வியாபார நடவடிக்கை அமைச்சர் (மே.மா) இனால் சமர்ப்பிக்கப்படும் நியதிச் சட்டம்**

*“மேல் மாகாணத்தின் 2015 இன் ............. ஆம் இலக்க நிதி (திருத்த) நியதிச் சட்டம் ”*

[முதலாம் முறை வாசித்தல்]

{ 2014 இன் 04 ஆம் இலக்க நியதிச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1990 இன் 06 ஆம் இலக்க மேல் மாகாணத்தின் நிதி நியதிச் சட்டத்தை திருத்துவதற்குரிய நியதிச் சட்டம் ஒன்றாகும். }

## XIII. சபை ஒத்திவைப்பு

கே.எச்.டி.கே. சமரக்கோன்
செயலாளர்,
மேல் மாகாண மாகாண சபை

2015.07.08 ஆந் திகதி
சபைச் செயலாளர் காரியாலயம் (மே.மா)
மேல் மாகாண மாகாண சபை,
5ஆம் மாடி, Bஅலகு,
செத்சிறிபாய,

பத்தரமுல்ல.